மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்புடைய வினாவாகக் கேட்க வேண்டும்.

9–50 மணி

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, நதிகளை எல்லாம் தேசியமயமாக்குகிற திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னோடியாக நின்று மத்திய அரசை வற்புறுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, கடுமையான வறட்சி அங்கே இருக்கிறது. லட்சக் கணக்கான விவசாயிகள் குடிபெயர்ந்து வெளியே போகிற சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருவார்களானால், அந்த ஏரியாக்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று காட்டுவதற்கும், உடன் இருந்து பணியாற்றுவதற்கும் நான் கடமைப்பட்டு இருக்கிறேன்...

9.50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் வருவார்களா என்று கேட்கிறார்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து ஆய்வு செய்யவேண்டும் என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவே வருவதற்கு முயல்வார்களா என்று கேட்கிறார்கள். இன்றைக்கு, நேரத்திற்கு வறட்சி அதிகம் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதிக்கு என்னை அழைத்தால், நான் நிச்சயமாக வருவேன்.

பாலம் கட்டுதல்.

*3142—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் திருபுவனம் பேரூராட்சி, திருவிசநல்லூர் ஊராட்சிகளை இணைத்து காவிரி, வீரசோழன் ஆறுகளில் பாலம் கட்ட பகுதி இரண்டு திட்டத்தில் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

1990 சனவரி 25]

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு பெரியார் மாவட்டத்தில் இந்தப் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் எத்தனை லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன ? அவை எந்தெந்த பகுதிகளில் இருக்கின்றன என்பதை நான் பணிவோடு தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அடுத்து, நம்பியூர், புஞ்சை புளியம்பட்டி என்பது இரண்டு தாலுக்காக்களை இணைக்கிற பகுதி. இங்கே கடுமையான வறட்சி காரணமாக விவசாயிகள் ஆடுமாடுகளைக் கூட வைத்துக்கொள்ள முடியாமல், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல், அந்தப் பகுதி வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மேற்கு நோக்கி ஓடி கடலில் வீணாகக் கலக்கிற நதிகளைத் திருப்பி விடுகிற முயற்சியிலே ஈடுபட்டு, அந்தப் பகுதிகளை இணைப்பதற்கான முயற்சியினை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டி, நம்பியூர் என்பவை பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் திட்டத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கின்றன. சுமார் 30 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. Technically and geographically it is an impossible one. இரண்டாவது, ஏற்கனவே இருக்கிற ஆயக்கட்டுகளில் கிட்டத்தட்ட 2 லட்சத்து 50 ஆயிரத்து 656 ஏக்கர் நிலம் இன்றைக்குப் பாசனத்திலே இருக்கிறது. மேலும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரை நான்காவது ஜோனில் சேர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இருக்கும் மூன்றாவது ஜோனுக்கே தண்ணீர் கொடுப்பதில் தட்டுப்பாடு இருக்கிறது. நான்காவது ஜோனை எடுக்க வேண்டும். காரணம் கால்வாய்களை வெட்டி இருக்கிறோம். ஆகவே இதற்கு மேற்கொண்டு புஞ்சை புளியம்பட்டிக்கும், நம்பியூருக்கும் போவது இன்றைய நிலையில் இல்லை. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் எல்லாம் கிழக்கு நோக்கி ஓடிவந்து நம் ஊரில் தேங்கி நிற்கும் காலத்தில் நிச்சயமாக புஞ்சை புளியம்பட்டி, நம்பியூர் கவனிக்கப்படும் என்று நானும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதை மனதில் கொண்டு, தேசிய முன்னணி அரசில் மத்தியில் அங்கம் வகிக்கிற நீங்கள்..........

1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தச் சாலையினுடைய முக்கியத் துவத்தை உணர்ந்து அதை ஒரு வழிப் பாதையாக, ஒன் லைன் மட்டும், டபுள் லைனுக்கு வந்திருக்கிறது—ஒன் லைன் சாலை யாகப் போடுவதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருக் கிறது. ஆய்வு அறிக்கை கிடைத்த பிறகு அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர் களே, கும்பகோணத்தை ஒட்டியிருக்கின்ற அந்தப் பகுதிக்கு சுற்று வழிச் சாலை அமைக்கின்ற அந்தத் திட்டத்தில் இந்த வேலையும் இடம் பெற்றிருக்கிறது. தேசிய விழாவாகக் கொண் டாடப்படுகின்ற 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகின்ற மகா மகம் திருவிழாவையொட்டி, இந்தச் சுற்றுச் சாலை அமைக்கப் பட இருக்கிறது. எனவே 1990–91 ஆம் நிதி ஆண்டுக்குள் இந்தப் பாலத்தைக் கட்ட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முதலில் ஆய்வு அறிக்கை வரட்டும், பிறகு எந்த ஆண்டு எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றி அதனுடைய நிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே இது பேருந்து வழித்தடமாக அமைய உள்ள பாலம். எனவே சிங்கில் லைன் என்பதை டபுள் லைனாக மாற்ற அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அதுவும் ஆய்வு அறிக்கை வந்தபிறகு கவனிக்கப்படும்.

மேட்டூர் இடது, வலது கரை கால்வாய் தண்ணீரை பாசனத்திற்கு விடுதல்

*3254 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் இடது, வலது கரை கால்வாய் தண்ணீரை நிரந்தரமாக பாசனத்திற்கு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?